**22.02.2024**

**அ.வ.எண். 38/2021**

**<u>வா.சா.1 ரமேஷ் அவர்கள் மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

1. ராஜன் ஐயர் என்பவர் எனக்கு பொதுஅதிகாரம் பத்திரம் எழுதிகொடுத்தார். ராஜன் ஐயர் என்பவருக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்கிறேனா அல்லது பொதுஅதிகாரம் முகவர் என்ற முறையில் எனக்கு தெரிந்தவை குறித்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால் பொதுஅதிகார முகவர் என்ற முறையிலும் ராஜன் ஐயர் என்பவருக்கு பதிலாக சாட்சியம் அளிக்கிறேன். தாவா சொத்துகளை ஏ அட்டவணை பி அட்டவணைகளாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

2. ஏ அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர். பொதுஅதிகாரம் பத்திரம் எனக்கு ராஜன் ஐயர் எத்தனை பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் வழக்கு நடத்துவதற்கும் சொத்துகளை பார்த்துகொள்வதற்கும் இரண்டு பத்திரங்கள் எழுதிகொடுத்துள்ளார். எனது பொதுஅதிகார முதல்வரான ராஜன் ஐயர் என்பவரை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கபோவதில்லை.

3. பொதுஅதிகார முகவராக நான் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து நடந்த விவரங்களை மட்டும்தான் என்னால் சாட்சியம் அளிக்கமுடியும் என்றாலும் அதற்கு முன்பு நடந்த விவரங்கள் குறித்து நான் சாட்சியம் அளிக்கமுடியாது என்றாலும் சரியல்ல. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆங்கிலம் எனக்கு ஓர் அளவுக்குதான் தெரியும்.

4. என்னிடம் காட்டப்படும் பொதுஅதிகார பத்திரத்தில் உள்ள விவரங்களை நான் படித்து தெரிந்துகொண்டேன் மற்றும் எனக்கு தெரியாததை நான் கேட்டு தெரிந்துகொண்டேன். ( பொதுஅதிகார பத்திரத்தினை சாட்சியிடம் படித்து காண்பிக்குமாறு கூறியபோது அவர் சில வார்த்தைகள் படிக்க தெரியவில்லை என்று கூறினார் ) பொதுஅதிகார பத்திரத்தில் எனக்கு தெரியாத வார்த்தைகளை யாரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் பொதுஅதிகார பத்திரம் பதிவு செய்யும்போது என்னுடன் வந்த நபரிடமும் வழக்கறிஞரிடமும் கேட்டு தெரிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பொதுஅதிகார பத்திரமா என்றால் ஆமாம்.

5. மேற்படி பொதுஅதிகார பத்திரம் எதற்காக எழுதிகொடுத்தார்கள் என்றால் சொத்துகளை பார்த்துகொள்வதற்கும் வழக்கு நடத்துவதற்கும் மேற்படி பொதுஅதிகார பத்திரம் எழுதிகொடுத்தார்கள். வாதி பிரதிவாதிகள் என்னவென்று எனக்கு தெரியும். சொத்துகளை பராமரிப்பதற்காக ராஜன் ஐயர் எனக்கு தனியாக பொதுஅதிகார பத்திரம் எழுதிகொடுத்தாரா என்றால் தற்போது என்னிடம் காட்டிய அதே பொதுஅதிகார பத்திரத்தில்தான் (Power of Attorney) சொத்துகளை பார்த்துக்கொள்வதற்கும் அதிகாரம் கொடுத்தார்.

6. தாவா ஏ அட்டவணை சொத்து புஞ்சை மற்றும் நஞ்சை நிலங்கள் என்றால் தாவா ஏ அட்டவணை சொத்து புஞ்சை நிலங்கள். தாவா பி அட்டவணை புறம்போக்கு நிலங்கள் என்றால் சரிதான். தாவா சொத்துகளை ராஜன் ஐயர் என்பவருக்கு சிவா என்பவர் கிரையம் கொடுத்தார். தாவா சொத்தில் என்ன பிரச்சனை என்றால் சாலையிலிருந்து தாவா ஏ அட்டவணை சொத்திற்கு செல்ல வேண்டுமென்றால் தாவா பி அட்டவணை சொத்தின் வழியாகதான்

சென்று தாவா ஏ அட்டவணை சொத்தில் விவசாயம் செய்யமுடியும். தாவா ஏ அட்டவணை சொத்தினை கிரையம் வாங்கியவர்தான் தாவா பி அட்டவணை சொத்தினை அனுபவித்துவந்தார். ஏழுமலை என்பவரை ஏன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் ஏழுமலை என்பவர் சிவாவின் அண்ணன், இரண்டு நபர்களும் சேர்ந்து தாவா சொத்துகளில் பிரச்சனை செய்வதால் இருவரையும் தரப்பினராக சேர்த்தேன்.

7. தாவா ஏ அட்டவணை சொத்தின் சர்வே எண் 176/1சி. தாவா பி அட்டவணை சொத்தின் சர்வே எண் 293/1. தாவா ஏ அட்டவணை சொத்திற்கு கிழக்கு பக்கம் தாவா பி அட்டவணை சொத்து உள்ளது. தாவா பி அட்டவணை சொத்தின் தெற்கு பக்கம் உள்ள நிலத்தின் சர்வே எண் 176/1டி. அந்த சர்வே எண்ணும் தாவா ஏ அட்டவணை சொத்துதான். வா.சாஆ 3 ல் உள்ளபடி புலத்தில் உள்ளதா என்றால் உள்ளது. சர்வே எண் 176/1சி மற்றும் 176/1டி ஆகிய இரண்டு சொத்துகளையும் ராஜன் ஐயர் கிரையம் வாங்கினார். தாவா பி அட்டவணை சொத்து என்ன புறம்போக்கு நிலம் என்றால் மேய்க்கால் புறம்போக்கு.

8. வா.சாஆ 3ல் காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண் 176/1டி ன் வரைபடம் தவறாககூட இருக்கலாம். தாவா சொத்துகள் சிவாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் சிவாவின் தகப்பனார் கிருஷ்ணன் என்பவருக்கு அவரது சகோதரர்கள் செட்டில்மெண்ட் எழுதிவைத்தார்கள். சிவாவின் தகப்பனார் சிவாவிற்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தார். தாவா ஏ அட்டவணை சொத்திலிருந்து சாலைக்கு செல்வதற்கு தாவா பி அட்டவணை சொத்தினை தவிர்த்து எனக்கு வேறு வழி உண்டு என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தின் வழியாகதான் செல்லமுடியும்.

9. எனது வாதுரையில் "Nobody can present muchless the defendants who are vendors" என்ற வாக்கியம் அரத்தமற்றது என்றால் சரியல்ல. எனது பிராதுவில் தாவா ஏ அட்டவணை சொத்தின் அட்டவணையில் சர்வே எண் 176/1டி ல் 7 என்கின்ற எண்ணை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா பி அட்டவணை சொத்தின் வழியாக தாவா ஏ அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்ததால் நான் இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன். தாவா சொத்தின் உரிமையை விளம்புகை செய்யகோரி நான் இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் தாவா சொத்துகள் எங்களுடையதுதான். வா.சா.ஆ 3 ல் விஸ்தீரணம் சொல்லவில்லை. இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.